www.tamilarangam.net

# யார் இந்தப் புத்திஜீவி ?

தற்போது நோர்வேக்கு வந்திருக்கும் சிவத்தம்பி தான் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவரும் பேராசியரும் என்பதால் மட்டும் இவரை புத்திஜீவி என ஒத்துக் கொள்ளலாம். இவரது இன்றைய வெளிநாட்டுப் பயணம் எமது போராட்டத்தை வெளிநாட்டு சக்திகளிடம் விற்பதற்காகவே என்பதை பலரும் அறிய இன்னும் சிலகாலம் செல்லலாம்.

தனது மாணவர்களின் நியாயமான போரட்டத்தையே கைவிடும்படி கோரிய U. T A இன் முக்கிய நபர். மாணவ தலைவனும் தேசபக்தனுமான விமலேஸ்வரன். மாணவர்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுத்த ஒரே காரணத்திற்காக ( L.T .T. E இன் பயங்கரவாதத்திற்கு இரையாகி ) நடுத்தெருவில் அநாதைப் பிணமாய் விழுந்த போது முதுகுக்குப் பின்னால் கைகட்டி நின்று பயங்கரவாத்துக்கே துணைபோன / போகும் பச் சோந்திகள் கூட்டத்தில் ஒருவர்.

அன்று அநுராதபுரத்தில் இனப்படுகொலையை ( LT T E இனால் ) நடத்திய போதும் ( சும்மா சொன்னீங்க ) யாழ் முஸ்லீம்கள் யாழ் நகரை விட்டு வெளியேற்றப்பட்ட போது முஸ்லீம் மக்கள் மீது LT T E இனப்படுகொலை நடத்திய போது பயங்கரவாதிகளோடு கைகோர்த் பச்சை இனவாதி இவர்.

விஜிதரன் , TRRO ஸ்தாபகர் கந்தசாமி, விமலேஸ்வரன், ராஜினி ( முறிந்த பனைமரம் ) கேசவன் ( புதியதோர் உலகம் ) செல்வி ( சிறந்த கவிஞர் பெண்ணிலைவாதியும் pen 92 அமைப்பின் சர்வதேச விருது பெற்றவர். ) சேந்தன் ( பொறியிலாளர் உட்பட இன்னும் அறியப்படாத கல்விமான்கள் அறிவாளிகள் பெண்ணிலைவாதிகள் இலக்கியவாதிகள் அரசியல்வாதிகள், ஜனநாயகவாதிகள் தேச பக்தர்கள் பலரும் கொல்லப்பட்டும் இன்றுவரை தமிழ் சிறைகளில் கடூழிய சித்திரவதைகளை அநுபவிப்பதை கண்டும் கேட்டும் நெஞ்சமே இரங்காத மனிதாபிமானத்தை தனக்குள்ளேயே கொன்ற பண்பாட்டு கொலையாளி.

முதுகில் குண்டடிபட்ட மகனுக்கு அமிர்தம் சுரந்த மார்பகத்தையே வெட்டி வீசிய வீரத்தாயின் கதையை நாமறிவோம்.

பசுவின் கன்றின் மேல் தேரேற்றிய மகனையே அதே தேரால் ஏற்றி பசுவுக்குமீ நீதி தந்த நீதிக் கதையை நாமறிவோம்.

நீர் உரைப்பதெல்லாம் வீரப் போரல்ல நீதிப் போருமல்ல உம்மை நாம் அறிவோம்.

அன்று கிட்லருக்கு ஒரு கோயபெல்ஸ்

இன்று ‘ தம்பிக்கு ’ ஒரு சிவதம்பி.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அனைவரும் சிவத்தம்பி போன்ற போலிகளை அம்பலப் படுத்த வேண்டியது இன்றைய அவசியமாகிறது.

இளைஞரின் தியாகங்களை மதிக்கிறோம்.

தியாகங்களை விலைபேசும் இவர்களை வெறுக்கிறோம்.!

நாட்டையே சூறையாடும் கொலையாளிகளை அம்பலப்படுத்துவோம் !

அமைதிப் பெரும்பான்மையே உங்கள் மௌனம் விலை பேசப்படுகிறது

புதியதோர் விதி செய்வோம்.

ஜனநாயகம் மீட்கப்படும்வரை மௌனம் கொள்வோம்.

சுயாதீன தகவல் மய்யம்

நோர்வே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்